FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040859

1. District : புதுக்கோட்டை PS: காவல்நிலையம் உரம்பு லஞ்ச மற்றும் ஊழல் தடுப்பு Year: 2026 ஆண்டு FIR No.: 02/26 முத.அ. எண் Date: 19.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988, as amended as 2018 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 106

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 18.06.2026 நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12:00 Time to : நேரம் வரை 19:00 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 Time : நேரம் 15:30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ தெற்கு.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி ஆலங்குடி கண்ணன் காம்ப்ளக்ஸின் முதல் மாடியில் உள்ள ஆலங்குடி டோல்கேட் வாகன பகுதி அலுவலகம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : தே.ஜமி.அன்பரசி குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் 56/2026 (b) Father's/ Husband's Name : ஜமீரவசந்தரம் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18.05.1970 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கண்காணிப்பாளர் (g) Address : முகவரி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாவட்ட அரசியரகம், புதுக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) தே.ந.மணிமாறன், த/பெ. நடேசன், மோட்டார் வாகன ஆய்வாளர் 2) தே.ரெ. வெற்றிவேல், த/பெ. ரெங்கசாமி, கனரக பிரிவு, மற்றும் 3) தே.செ. ராமஸ்ரீனிவாசன் ராஜ், த/பெ.சுப்பையாராஜ், டோல்கேட் வாகன பகுதி அலுவலகம், அலங்குடி புதுக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/06/26.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு VE 19/06/26

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.06.2026

Name: பெயர் ஜ.ராதாகிருஷ்ணன்.
Rank: நிலை .....No. எண் .....
தோல் சிறைக் காவலர் பயிற்சி பள்ளி
நாகப்பட்டினம்.

பணிந்தனுப்பப்பட்டது.

நேற்று 18.06.2026ஆம் தேதி வியாழக்கிழமை புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குழுவினரும் சேர்ந்து மதியம் 12.00 மணி முதல் 19.00 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து, இன்று 19.06.2026ஆம் தேதி ஆய்வு குழு அலுவலர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : – அனுப்புனர் திரு.வயி.அன்பரசு, வயது 56/2026, த/பெ வயிரவசுந்தரம், கண்காணிப்பாளர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை மாவட்டம், பெறுநர். காவல் துணைக்கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா நேற்று 18.06.2026ஆம் தேதி வியாழக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஒட்டுநர் உரிமம் பெறுவதற்காக வரும் பொதுமக்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு ஒட்டுநர் உரிமம் வழங்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் எனது குழு மற்றும் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ச.ராதாகிருஷ்ணன் மற்றும் குழுவினருடன் இணைந்து நேற்று (18.06.2026) மதியம் 12.00 முதல் 19.00 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் பட்டுக்கோட்டை செல்லும் சாலையின் வடக்குபுறமாக தெற்குபார்த்தவாறு உள்ள கண்ணன் காம்ப்ளக்ஸின் முதல் மாடியில் அமைந்துள்ள மோட்டார் வாகன பகுதி அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டோம்.

திடீர் ஆய்வின்போது, ஆலங்குடி பட்டுக்கோட்டை மெயின்ரோட்டில் கண்ணன் காம்ப்ளக்சின் முதல் மாடியில் மாடிப்படிக்கு கிழக்கே நேஷனல் இன்சூரன்ஸ் போர்ட்டல் ஆபிஸ்க்கு அடுத்து 3 அறைகளில் தெற்குபார்த்த வாசலுடன் அமைந்துள்ள மோட்டார் வாகன அலுவலகத்தின் முதல் அறையை சோதனை செய்த போது, அந்த அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் இருக்கைக்கு எதிரே இருந்த பிளாஸ்டிக் ஸ்டூலில் உட்கார்ந்திருந்த Bonton Staff திரு.வெற்றிவேல் என்பவர் இருந்தார். அவரை சோதனை செய்த போது அவரது பேன்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூ.900/– இருந்தது. அதுகுறித்து விசாரித்த போது தகுந்த முகாந்திரம் கூறவில்லை. மேலும், அவரை அந்த அலுவலகத்தின் மூன்றாவது அறையில் உள்ள அவரது இருக்கைக்கு அழைத்து சென்று அங்கு சோதனை செய்த போது அவரது மேஜையின் டிராயரின் மேல்பக்கமாக ஒரு சிறிய டப்பாவில் இருந்த ரூ.100/–ஐ எடுத்து ஆஜர்படுத்தினார், அவரிடம் பணியாளர்களின் கையிருப்பு பதிவேடு பற்றி கேட்டதற்கு அவரது அறைக்கு வெளியே தெற்கு பக்கமாக இருந்த மேஜையின் மேலிருந்து அந்த பதிவேட்டை எடுத்து கொடுத்தார். அதை பரிசீலனை செய்த போது இன்று

18.06.2026ம் தேதி அவரது கையிருப்பாக ரூ.100/– என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் அந்த பணம் ரூ.100/– அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி சரியான விளக்கம் அளிக்காத பணம் **ரூ.900/–** கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க அவரது G-Pay எண் (செல்நம்பர்) 8489121493–லிருந்து அண்ணை டிரைவிங் ஸ்கூல், வெங்கடேஷ்வரா டிரைவிங் ஸ்கூல், அம்மன் டிரைவிங் ஸ்கூல், சுற்பகம் டிரைவிங் ஸ்கூல் ஆகிய பயிற்சி பள்ளிகளுக்கு மேற்படி வெற்றிவேல் G-Pay மூலம் அனுப்பியதாகவும், அந்த தொகை சூழ்நிலைக்கேற்ப மோட்டார் வாகன ஆய்வாளருக்கு புதுக்கோட்டை செல்லும் வழியில் பல்வேறு இடங்களில் கொடுக்கப்படும் என தெரிவித்தார். மேலும் அந்த எண்ணின் G.Pay மூலம் பல நபர்கள் மற்றும் டிரைவிங் ஸ்கூல்களிடமிருந்து பண பரிவர்த்தனைகள் ரூ.1,55,850/– 06.03.2026 முதல் 16.06.2026ஆம் தேதி வரை நடைபெற்றுள்ளது.

அப்போது சுமார் பகல் 12.10 மணிக்கு இருவர் மோட்டர் வாகன ஆய்வாளர் அறைக்கு வந்தார்கள். அவர்களை விசாரணை செய்ததில் ஒருவர் மோட்டர் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் என்றும், மற்றொருவர் ஆலங்குடியில் வெங்கடேஷ்வரா டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திரு.பிரபு என்றும் தெரியவந்தது. அப்போது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் என்பவரை சோதனை செய்த போது, அவர் தான் அணிந்திருந்த சட்டை பாக்கெட்டிலிருந்து வெள்ளை நிற பாலிதீன் கவரை எடுத்து அதிலிருந்து ஒரு கத்தையாக பணத்தை ஆஜர் செய்தார். அதில் ரூ.1,700/– (500 X3, 100 X 1, 50 X 2) இருந்தது. அதுபற்றி கேட்டதற்கு, தான் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வரும்போது ரூ.1,800/– கொண்டு வந்ததாகவும், அதில் ரூ.100/–க்கு பலாப்பழம் வாங்கியதாகவும், மீதப்பணம் ரூ.1,700/– தனது செலவுக்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். ஆனால் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் ரூ.3,000/– வைத்திருந்ததாக அவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து அவர் முன்னுக்குப்பின் முரனாகவும், மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் கூறாததாலும், அந்த தொகை **ரூ.1700/–** கணக்கில் வராத பணமாக கருதி கைப்பற்றப்பட்டது.

மேலும் பிரபு என்பவரை விசாரணை செய்த போது, அவர் வெங்கடேஷ்வரா டிரைவிங் ஸ்கூல் என்ற பெயரில் ஒட்டுநர் பயிற்சி பள்ளியை ஆலங்குடியில் நடத்தி வருவதாகவும், இன்று மோட்டார் வாகன ஆய்வாளர் வாகன ஓட்டுநர்களின் திறன் சோதனை மற்றும் வாகனங்களை சோதனை செய்துவிட்டு, அவரை இந்த அலுவலகத்திற்கு அழைத்து வந்ததாக தெரிவித்தார்.

மேலும் அந்த அலுவலகத்தின் வரண்டாவில் காத்திருந்த 1. திரு.ஸ்ரீதரன், த/பெ பாண்டியன், கறம்பக்குடி, 2.திரு.நாகராஜன், த/பெ சிவயோகநாதன், கறம்பக்குடி, 3.திரு.பால்ராஜ், த/பெ ராஜப்பா, அம்புக்கோவில், கறம்பக்குடி, 4.திரு.பாபு, த/பெ கணேசமூர்த்தி, குளந்திரான்பட்டு, கறம்பக்குடி, 5, திரு.பாலசுப்பிரமணியன், த/பெ ரெங்கசாமி, கறம்பக்குடி, 6.திரு.கணேஷ், த/பெ சேகர், கல்லாலங்குடி, ஆலங்குடி, 7.திரு.முத்துக்குமரன்,

த/பெ உடையார், கறம்பக்குடி, 8.திரு.முத்துக்கருப்பையா, த/பெ பாலையா, கறம்பக்குடி, 9. திரு.புஷ்பகாந்தன், த/பெ லெட்சுமணன், வம்பன் நால்ரோடு, ஆலங்குடி, 10.திரு.முகிலன், த/பெ பாரதிதாசன், கறம்பக்குடி, 11.திரு.ஜெயபால், த/பெ தனபால், அம்புக்கோவில், கறம்பக்குடி, 12. திரு.ராமநாதன், த/பெ சுப்பையா, PLA Motors புதுக்கோட்டை, 13.திரு.ஆரோக்கியசாமி, த/பெ வேதமுத்து, வாழக்கொல்லை, 14.திரு.இளங்கோவன், மழையூர், 15) திரு.பாண்டி, த/பெ மணிவேல், கண்ணகி தெரு, ஆலங்குடி, 16) திரு.ரவிச்சந்திரன், த/பெ ரெங்கசாமி, மழையூர், ஆலங்குடி, 17) திரு.கண்ணன், த/பெ ராமகிருஷ்ணன், திருவரங்குளம், ஆலங்குடி, 18) திரு.ராஜேந்திரன், த/பெ கோவிந்தசாமி, ஆலங்குடி, 19) திரு.செந்தில்குமார், த/பெ கோவிந்தசாமி, ஆலங்குடி, 20) திரு.நவின், த/பெ நாகராஜன், குளந்திரான்பட்டு, கறம்பக்குடி, 21) திரு.பாண்டி, த/பெ நெடுஞ்செழியன், குளந்திரான்பட்டு, கறம்பக்குடி ஆகியோர்களை விசாரித்ததில் வாகன உரிமம் மற்றும் அதுதொடர்பான அலுவல்களுக்காக வந்திருந்தாக தெரியவந்ததால் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அப்போது திருமதி.ஈஸ்வரி என்பவர் அந்த அலுவலகத்திற்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில், அவர் அந்த அலுவலகத்திற்கு புதிதாக பணியில் சேரவந்த கண்காணிப்பாளர் என தெரியவந்தது. அவரை தொடர்ந்து அங்கிருந்து கவனிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. அவரும் தொடர்ந்து அங்கிருந்து கவனித்தார்.

அதன்பிறகு, அந்த அறைக்கு கிழக்குபுறம் உள்ள அறையை ஆய்வு செய்த போது அந்த அறை இருபாகங்களாக அலுமினிய தடுப்பால் தடுக்கப்பட்டுள்ளது. அதன் முன்பக்கத்தில் போடப்பட்டிருந்த டேபிள் மற்றும் சேர்களில் விமல் மற்றும் தியாகராஜன் ஆகியோர்கள் அமர்ந்திருந்தார்கள். அதில் விமல் என்பவரை விசாரணை செய்த போது, தான் உதவியாளராக பணி செய்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்த போது தனது சட்டைப் பாக்கெட்டிலிருந்து ரூ.480/- வைத்திருந்தார். மேலும் கையிருப்பு பதிவேட்டை பார்த்த போது ரூ.500/- பதிவு செய்திருந்தார். இதுகுறித்து அவரை விசாரித்த போது, தான் டீ சாப்பிட்டுவிட்டு மீதத்தொகை வைத்திருப்பதாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி தொகை ரூ.480/- அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு கீழே இருந்த இரண்டு பதிவேடுகளுக்கிடையே நான்கு 100 ரூபாய் நோட்டுகளாக மொத்தம் ரூ.400/- இருந்தது, அதுகுறித்து விசாரணை செய்த போது தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்த தொகை **ரூ.400/-** கைப்பற்றப்பட்டது.

மற்றொருவர் தியாகராஜன் என்பவரை விசாரணை செய்த போது, தான் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்த போது ரூ.430/- இருந்தது. இது சம்மந்தமாக பணியாளர் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் ரூ.430/- என்று பதிவு செய்யப்பட்டிருந்தது, அதனால் மேற்படி தொகை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

அதற்கடுத்து இருந்த அறையின் வரண்டா பகுதியில் உட்கார்ந்திருந்த நபரை விசாரணை செய்த போது, அவரது பெயர் முத்து என்றும், அம்மன் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது ரூ.100/–ஐ எடுத்து ஆஜர்படுத்தினார். அந்த பணம் பற்றி விசாரணை செய்த போது தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

இச்சோதனையின் முடிவில் விளக்கம் கூறாத மேலே குறிப்பிட்டபடி **ரூ.3,000/–** மட்டும் கைப்பற்றப்பட்டது. மேலும் 1) 2025–2026–ஆம் ஆண்டிற்கான பணியாளர் கையிருப்பு பணப்பதிவேடு, 2) அலுவலர்களின் வருகைபதிவேடு, 3) மாற்றுபணி அலுவலரின் வருகை பதிவேடு, 4) Bonton Staff வருகை பதிவேடு மற்றும் 5) விண்ணப்பதாரர்கள் வருகை பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. எனவே மேற்கண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன், Bonton Staff திரு.வெற்றிவேல் மற்றும் திரு.விமல், உதவியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரிய இந்த மனுவை மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். ஒப்பம் (திரு. திரு.வயி.அன்பரசு, வயது 56/2026, த/பெ வயிரவசுந்தரம், கண்காணிப்பாளர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை மாவட்டம்)

Sir, Received a complaint at 15.30 hrs on 19.06.2026 and registered a case in Pudukkottai V&AC Cr.No.02/2026 u/s 106 BNSS and 7 of Prevention of Corruption Act as Amended on 2018 against 1) Tr.Manimaran, Motor Vehicle Inspector, 2) Tr.Vetrivel, Bonton Staff, Motor Vehicle Inspector Office 3) Tr.Vimal, Assistant Motor Vehicle Inspector Office, Alangudi, Pudukkottai District. (S/d. ச.ராதாகிருஷ்ணன், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை. நாள்.19.06.2026)

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையின் அசல்களை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கும் அனுப்பியும் ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

19/06/26.
(S. Radhakrishnan)
Dy. Suptt. of Police
V&Ac / Pudukkottai